### தேர்தல் ஆணையம் எஸ்.ஐ.ஆர் பணிகளுக்கு ஒருவாரம் கால நீட்டிப்பு!

# தி.மு. கழகத்தின் ஜனநாயகப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி இது!

## புதுடெல்லியில் – கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. பேட்டி!



சென்னை,டிச.1-

**திமுக சட்டத்துறைச் செயலாளரும், மூத்த வழக்கறிஞருமான என்.ஆர். இளங்கோ எம்.பி., நேற்று (30-11-2025) டெல்லியில் உள்ள தனது இல்லத்தில் தேர்தல் ஆணையம் SIR நடவடிக்கைக்கு ஒருவாரம் கால நீட்டிப்பு வழங்கியிருப்பது குறித்து செய்தியாளர்களை சந்தித்து விளக்கம் அளித்தது தொடர்பான செய்திக்குறிப்பு வருமாறு:**

தேர்தல் ஆணையம் 27-10- 2025 அன்று மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அறிமுகப்படுத்திய எஸ்.ஐ.ஆர் நடைமுறையும் அதன் கால அளவீடுகளும் நடைமுறைக்கு உவாதவை என்பதை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் 2002 ஆம் ஆண்டிலிருந்தே இறந்துபோன வாக்காளர்கள், இரட்டைப் பதிவுள்ள வாக்காளர்கள் மற்றும் குடிமாறிச் சென்றவர்களை நீக்கி தூய்மையான வாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. எஸ்.ஐ.ஆர் நடைமுறையை நாங்கள் வரவேற்றாலும், இந்த வழிமுறைகள் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கின்றன. இவை பல வாக்காளர்களை நீக்குவதற்கும், தகுதியில்லாத வாக்காளர்களைச் சேர்ப்பதற்கும் வழி வகுக்கும் என்ற அச்சம் எழுகிறது.

மேலும் தகுதி இல்லாத வாக்காளர்களை சேர்ப்பதற்கான வழி காட்டுகிறது என்பதை எடுத்துச் சொன்னோம். அதில் முதலாவதாக காலக்கெடு என்பது மிக நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கிறது என்பதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருந்தோம். கழகத் தலைவர் அவருடைய வழிகாட்டுதலின் பெயரில் வழக்கு உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டது, ஜனநாயக முறையில் கூட்டணி கட்சி தலைவர்கள் அனைவரும் இணைந்து அறப்போராட்டம் நடத்தினோம், இருந்தாலும் கூட களத்திலிருக்கும் எந்த ஒரு வாக்காளருடைய வாக்கும் நீக்கப்படக்கூடாது என்பதற்காக திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய பிஎல்ஏக்கள் தீவிரமாக பணியாற்றினார்கள்.

ஒவ்வொரு நாளும் தேர்தல் ஆணையர் எவ்வளவு படிவங்களை வழங்கினோம் எவ்வளவு படிவங்களை கணினி மயமாக்கினோம் என்ற ஒரு கணக்கை தந்து கொண்டே வந்தார், ஏறக்குறைய 95 சதவீதத்திற்கு மேலான படிவங்கள் வழங்கப்பட்டுவிட்டன என்று சொன்ன தேர்தல் ஆணையம் ஏறக்குறைய 75 லிருந்து 80 சதவீதம் வரை கணனி மயமாக்கப்பட்டி ருக்கிறது என்றது. ஆனால் சென்னையில் 55 சதவீதம் மட்டும்தான் கணினி மயமாக்கப்பட்டிருக்கிறது.

எத்தனை படிவங்கள் அல்லது எத்தனை சதவீத படிவ செல்வங்கள் திரும்ப பெறப்பட்டன என்ற கணக்கை தேர்தல் ஆணையம் தரவே இல்லை எவ்வளவு கொடுத்தோம் என்று சொல்கிறார்கள் எவ்வளவு கணனி மயப்படுத்தினோம் என்று சொல்கிறார்கள் எவ்வளவு திரும்ப பெற்றோம் என்பதை மட்டும் சொல்லவே இல்லை.

இதன் மூலம் பல வாக்காளர்களுடைய வாக்குகளை நீக்கிவிடும் அச்சம் இருக்கிறது. மேலும் பெறப்பட்ட படிவங்களை கணினி மயமாக்குவதில் மிகுந்த காலத்தாமதம் ஏற்படுதாக நாங்கள் உணர்ந்தோம்; அதனால்தான் மீண்டும் மீண்டும் இந்த கால அட்டவணை சரியானது அல்ல என்பதை வலியுறுத்தி வந்தோம்; மேலும் பருவமழை காரணமாக இந்த பணிகள் பாதிக்கக்கூடிய வாய்ப்புகள் நிறைய இருக்கிறது என்பதையும் சுட்டி காட்டினோம்; அதற்கு ஏற்றார் போல் தற்போது வந்திருக்கக்கூடிய புயலும் அந்த பணிகளை பாதிக்க கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில் தேர்தல் ஆணையம் திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய அந்த நியாயமான வாதத்தை ஏற்று ஒரு வார காலத்திற்கு இந்த கணக்கீட்டு காலத்தை நீட்டித்திருக்கிறது அது உண்மையிலேயே திராவிட முன்னேற்ற கழகத்திற்கு அதனுடைய ஜனநாயக போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாக நாங்கள் பார்க்கிறோம்; எந்த ஒரு தமிழ்நாட்டு குடிமகனுடைய வாக்கும் விடுபட கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்த பயணத்தில் முதல் வெற்றியாக ஒரு வார காலத்திற்கு இதை தள்ளி வைத்திருப்பது கொடுக்கப்பட்ட அனைத்து படிவங்களை திரும்ப பெறுவதற்கும் அவற்றை கணினி மயமாக்குவதற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறோம். இருந்தாலும் கூட இந்த எஸ்ஐஆர் பணியில் பல சிக்கல்கள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

அவற்றை உச்ச நீதிம ன்றத்தில் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பீகார் தேர்தலில் அல்லது பீகார் மாநிலத்தில் நடத்தப்பட்ட எஸ்.ஐ.ஆரில் வாக்காளராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது தெரிந்தெடுக்கப்பட்டவர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர் அதை காட்டி தமிழ்நாட்டில் வாக்காளர் ஆகலாம் என்பதை 13வது ஆவணமாக நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்று தேர்தல் ஆணையம் கூறியிருப்பது எந்த விதத்திலும் ஒப்புக்கொள்ளக்கூடியது அல்ல.

அதாவது அந்த வாக்காளர் பீகாரில் சாதாரணமாக வசிக்க கூடியவர் என்பதை ஜூலை மாதம் 2025 தேர்தல் ஆணையம் அறிவித்தது, அந்த வாக்காளர் நவம்பர் மாதத்தில் பீகாரில் வாக்களித்துவிட்டு அதே நவம்பர் மாதத்தில் தமிழ்நாட்டில் நடத்தக்கூடிய எஸ்.ஐ.ஆரிலும் சாதாரணமாக வசிக்கக்கூடியவர் என்ற தகுதியை பெறுவார் என்பது எந்த விதத்திலும் ஒப்புக் கொள்ளக்கூடியதாக இல்லை. இது போன்ற பல காரணங்கள் இருக்கின்றன.

அவற்றை எடுத்துச் சொல்லி உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் 4 ஆம் தேதி எங்களுடைய வாதத்தை எடுத்து வைக்க இருக்கிறோம் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதியில் SIR தீவிர சிறப்பு வாக்காளர் கணக்கிட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பெற்று கொள்ளுவது மற்றும் படிவங்கள் கிடைக்க பெறாதவர்களுக்கு படிவங்களை அளிக்கும் வகையில் நடைபெற்ற சிறப்பு முகாமில் 92 வது வட்டத்திற்கு உட்பட்ட அரசு பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் நடைபெற்றது. இம்முகாமில் வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் அவர்களின் தலைமையில் வட்டத்திற்கு உட்பட்ட கழக பாக முகவர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர் கே. நீலகண்டன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ் மாவட்ட பிரதிநிதி எம்.சி.எழில்அரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைபடி, துணை முதல்வர் பிறந்த நாளையொட்டி திரு.வி.க. நகர் 76 ‘அ’ வட்டத்தில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது. இதில் 76வது வட்ட கழக செயலாளர் எஸ்.சசிகுமார், 76(அ) வட்ட கழக செயலாளர் எஸ்.வெங்கடேசன், மாவட்ட பிரதிநிதி கி. நாகலிங்கம், திருமதி சத்யா நாகலிங்கம், பகுதி பிரதிநிதி பி.வினோத், வட்ட பொருளாளர் ஆர்.ஜான்(எ)ரவி, எம். அசோக்குமார், ஏ.இருதயராஜ், ஏ.நெல்சன்ஜான், என்.சி.வெங்கடேசன், ரகு, விமல்ராஜ், ஏ.குமார், ஏ.அஜய் ஆகியோர் உடன் இருந்தனர்.

### வை.ம. அருள்தாசன் ஏற்பாடு! இளைஞர் எழுச்சி நாள்: திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில்

# பெண்களுக்கு கோலப்போட்டி - மாற்றுத்திறனாளிகளுக்கு நிதியுதவி- நலஉதவிகள்!

## ஆ.ராசா எம்.பி. – எஸ்.சுதர்சனம், கலாநிதி வீராசாமி, எஸ். மோகன் பங்கேற்பு!



சென்னை,டிச.1-

இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் எர்ணாவூர் மேம்பாலம் லிப்ட்டு கேட் ரவுண்டானாவில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில், மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் முன்னிலையில் பெண்களுக்கான மாபெரும் கோலம் போட்டி, பெண்கள் 300 பேருக்கு சேலை, மாற்றுத்திறனாளிகள் 50 நபருக்கு நிதி உதவிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் 50 நபருக்கு சீருடைகள் வழங்கப்பட்டது.

இதில் கழக துணைப் பொதுச்செயலாளர், மண்டலப் பொறுப்பாளர் நாடாளு மன்ற உறுப்பினர் ஆ.ராசா பங்கேற்று கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல், இரண்டு, மூன்றாம் பரிசாக முறையே ரூ.10000, ரூ.7000, ரூ 5000 வழங்கினார். தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் 50 பேருக்கு ரூ.1000/- வீதம் வழங்கினார்.

மகளிர் 500 பேருக்கு புடவையும் , ஆட்டோ ஓட்டுனர்கள் 50 பேருக்கு சீருடையும் வழங்கினார்.

இதில் கலாநிதி வீராசாமி எம்.பி, தி. நகர் எஸ். மோகன்,தலைமை கழக வழக்கறிஞர் கவி.கணேசன் எம்.சி, தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் சி.எச். சேகர், இ. குமரவேல், யு. எஸ். குறளரசன், M. வஜ்ரவேல் , டி. சேகர்,, ஆர்.தினேஷ்குமார், எம்.சந்திரகுமார், ந. ராம்குமார், ஜி.தினேஷ் , முருகா, எஸ். ஆறுமுகம், பொன். கோ.விஜயன், எஸ் ஆர். மலைராஜ், வீ. தியாகராஜன், ஆர். மோகனசுந்தரம், எஸ்.டி.சங்கர், ஆர். நவக்குமார், தழவை எஸ். ரஞ்சித், வை.ம.கண்ணதாசன் , டி.சக்கரவர்த்தி, வை. சின்னையன், மு. கார்த்திக், கே.செந்தில்குமார், எஸ்.சேது , புண்ணியமூர்த்தி, பி.கே.எஸ். சதீஷ்குமார், ஜி.ஹரிஹரன் , டி.கண்ணன், எஸ். தாமரை, பி.எம்.ஹரி, மு. பாபு, கே. சரவணன், எம். ராமு, ஆர். நரேன்குமார், ம. சுந்தர், வி.தன்ராஜ், வி.ஹிம்மவந்த், ஜே.எம். குமரன், சி.முத்துக்குமார், கே. கோகுல், எஸ்.சேதுபதி, பாண்டியன், அரவிந்தன், ஈ. பூங்கொடி, சாமுண்டீஸ்வரி, பாலாஜி, டி.ஞானசேகர், ரேஷன் கடைகுமார், பா. அஜித், சந்தோஷ் மதியழகன், ஆர்.கம்பளி, ஆர்.எஸ். யுவராஜ், ஜி.கணேஷ்,முத்து முருகேசன், ஜி.குணசேகரன், வேல்முருகன், டி. தேசப்பன், ராஜரத்தினம், எஸ். ஜோயல், கே. பூங்கொடி, ஆர். வசந்தி, பத்மா, புனிதா, எஸ். வினோத், ஜெ. மாரிமுத்து, வெற்றிச்செல்வன் டி. சக்கரபாணி, ஜெ. பிரேம்குமார், பி. ராஜா வி. சி.பிரபாகரன், லோகேஷ், எஸ்.சதீஷ், வை. பா.யோகித், யு. மாதேஷ் அன்பு,ஜெய் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 284 வது நாள்!

## கொளத்தூர் மேற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,டிச.1

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 284 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (30.11.2025), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 69, ஜி .கே. எம் காலனி, 6வது தெரு. 2) வட்டம் 64, நேதாஜி நகர், (ஜானகிராம் நகர் மெயின் சந்திப்பு), சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், எஸ்.தனசேகர், டி.யோகப்பிரியா, என். தாவூத் பீ, பி.அமுதா, சி.ஶ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: P.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம். பி.தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எம். மணிகண்டன் ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் தலைமையில் இளைஞர் எழுச்சி நாளையொட்டி திருவொற்றியூர் விம்கோ நகர் அருகில் அமைந்துள்ள REHOBOTH முதியவர் இல்லத்தில் மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஜி. ஆர். மணிவண்ணன், எஸ்.செல்வம், மணலி எஸ்.ஸ்டாலின், கே.டி. ஆர். பாலமுருகன், எம்.கார்த்திக் கே.பி.எஸ்.ரஞ்சித், எஸ்.தர்மேஷ்குமார், என்.கவிபாரதி ஹரிஸ், வெங்கட ஐசக்சாமுவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.பி.என். மாயன்

### டிசம்பர் 1 (2013)



**கொடைக்கானல் நகரச் செயலாளராக தொடர்ந்து 38 ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றியவர். திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**‘மிசா’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை வாசமும் – இந்தி எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் ஆதரவு ஆகிய போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**கொடைக்கானல் நகராட்சி, நகரியக் குழு உறுப்பினராகவும், கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலைத் தலைவராக இரண்டு முறையும் – கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு தாம்பரம் நகரத்தில்

# 300 விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்கள்!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வழங்கினார்!

தாம்பரம், டிச.1 -

தாம்பரம் மாநகர திமுக பெருங்களத்தூர் வடக்கு பகுதி மற்றும் மாநகர இளைஞரணி சார்பில் தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி 300,க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கும் விழா தாம்பரம் மாநகராட்சி 4,வது மண்டல குழு தலைவர் டி.காமராஜ் தலைமையில் தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ச.இராஜேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் மாணவ மாணவிகளுக்கு தாம்பரம் பகுதியை சேர்ந்த பல்வேறு விளையாட்டு அணிகள் வீரர்கள் 300,க்கும் மேற்பட்டவர்களுக்கு இரண்டரை லட்ச ரூபாய் மதிப்புள்ள விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இதில் பெருங்களத்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் எஸ்.சேகர்,காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி. கோல்டு பிரகாஷ்,மாமன்ற உறுப்பினர் டி.ஆர் கோபி, மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எஸ்.ஜி.கருணாகரபாண்டியன், பகுதி துணை செயலாளர்கள் கி.வேல்மணி ஆர்.செல்வகுமார், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள். வி.கார்த்திக், எஸ். சிவசுப்பிரமணியம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில்

# துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

## ஒரத்தி கண்ணன் உணவு வழங்கினார்

காஞ்சிபுரம், டிச.1.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவையொட்டி 27.1.2025 அன்று களத்தூர், கீழ் அத்திவாக்கம், நெடுங்கல், வெளியம்பாக்கம், ஒரத்தி, அனந்தமங்கலம் மின்னல் சித்தாமூர், கடமலைப்புத்தூர், முருங்கை மற்றும் பெரும்பேர் கண்டிகை முதியோர் இல்லம் ஆகிய கிராமங்களில் உள்ள அரசு பள்ளிகளில் மாணவ மாணவிகளுடன் கேக் வெட்டி முட்டையுடன் அறுசுவை உணவை ஒன்றியக் குழு பெருந்தலைவர் கண்ணன் வழங்கினார்.


இளைஞரணி அமைப்பாளர் பிரகாஷ் , நிர்வாகிகள் ரத்தினவேல்,

சாரதி, சிவக்குமார், ரமேஷ், வேலு, பாலாஜி, பாலசுப்பிரமணியம், மணவாளன்,கோவிந்தசாமி, ராஜசேகர்,வினோத், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாண்டியன், தனஞ்செயன்,தெய்வ சுந்தரம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# பி.என். பெரியண்ணன்

### டிசம்பர் 1 (2009)



**தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளராகவும், பின்னர் தருமபுரி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**பென்னாகரம் ஒன்றிய கவுன்சிலர், பென்னாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியவர்.**

**“அடக்கமும், அமைதியும் வாய்ந்தவர். எதற்கும் அதிர்ந்து பேசமாட்டார். கழகத் தோழர்களிடம் அன்பாகப் பழகி அனைவரையும் கட்டுக்கோப்பாக வைத்திருந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**